பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: மார்கழி 22 (6—1—68) சனி ★ வெளியூர்: மார்கழி 23 (7—1—68) ஞாயிறு [இதழ்: 171

'அண்ணா வழி நிற்போம்'--

மொழிப் பிரச்சினையில் தமிழக மாணவர்கள் முடிவு

சென்னை, ஜன. 6—

தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்திருந்த மாணவப் பிரதிநிதிகளும்—மாணவத் தலைவர்களும், முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களை நேற்றிரவு அமைச்சர் செ. மாதவன் அவர்கள் இல்லத்தில் சந்தித்து மொழிப் பிரச்சினை குறித்து நீண்ட நேரம் விவாதித்தனர்.

இந்தக் கூட்டத்தில் சட்டப் பேரவைத் தலைவர் சி.பா. ஆதித்தனார், அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, செ. மாதவன், நாடாளுமன்ற தி.மு.க. முழுத் தலைவர் க. அன்பழகன், நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. செழியன், க. இராசாராம், முரசொலி மாறன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஆட்சி மொழித் திருத்தச் சட்டம் பற்றியும், அதன்மீது கொண்டுவரப்பட்ட திருத்தங்கள் பற்றியும், சட்டத்துடன்கூட நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றியும் விரிவான விவாதம் நடைபெற்றது.

மாணவர்கள் தங்களுக்குள்ள அச்சத்தையும், கருத்துமிக்க ஐயப்பாடுகளையும், மொழிப் பிரச்சினைகளில் தீர்வு காண்பதற்கான வழிமுறைகளையும் தத்தம் நோக்கில் எடுத்துரைத்தனர்.

இறுதியில் கீழ்க்காணும் முடிவுகள் எடுக்கப்பட்டன; இந்த முடிவுகளை ஒருமனதாக வரவேற்றுக் கையொலி எழுப்பி அதன்படித் தாங்கள் நடப்பதாக மாணவர்கள் உறுதி தெரிவித்தனர்.

1. நாடாளுமன்றத்தில் நிறைவேறிய ஆட்சிமொழிச் சட்டமும் அதையொட்டி நிறைவேற்றப்பட்ட தீர்மானமும் திருத்தங்களும் தமிழர்களைப் பெரிதும் பாதிக்கும் வகையில் அமைந்திருப்பதால், அதனால் தமிழர்களுக்கு ஏற்படும் தீங்குகளைத் தமிழக அரசு அண்டை மாநில அரசுகளோடு தொடர்பு கொண்டும், ஒத்தக் கருத்துடைய அரசியல் கட்சிகளோடு கலந்து பேசியும் சட்ட ரீதியிலான முயற்சிகளை மேற்கொள்ளும்.

2. தமிழ்ப் பயிற்சி மொழித் திட்டத்தில் தீவிர நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளத் தமிழக அரசு மீண்டும் உறுதி தெரிவிக்கிறது.

3. சன. 25-ஆம் நாள் மொழி அறப்போரில் உயிர் நீத்த தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்த, கல்வி நிலையங்களுக்கு விடுமுறையளிக்கப்படும்.

4. இந்த உறுதிமொழிகளை மன நிறைவோடு மாணவர்கள் ஏற்றுக்கொண்டு—மொழிப் பிரச்சினையில் நல்லதொரு தீர்வு காணும் பொறுப்பினைத் தமிழக அரசிடம் ஒப்படைப்பதென முடிவு செய்து—கிளர்ச்சி நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்வதென மாணவர்கள் உறுதியளிக்கின்றனர்.

5. இந்த முடிவினை மீறிய நிலையில் யாராவது கிளர்ச்சியில் ஈடுபட்டால், அதனை ஆதரிப்பதில்லை என்றும் மாணவர்கள் உறுதி தெரிவிக்கின்றனர்.

மொழிப் போர்த் தியாகிகளுக்கு அமைச்சர்கள் அஞ்சலி!

மொழி அறப்போரில் உயிர்த் தியாகம் புரிந்த தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்தும் வகையில், சனவரி 25-ம் நாள், தமிழகக் கல்வி நிலையங்களுக்கு விடுமுறை விடப்படும்; அன்று மாணவர்கள் மௌன ஊர்வலம் நடத்தித் தியாகிகளுக்குத் தங்கள் வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்வர்.

அன்று மாணவர்கள் நடத்தும் கூட்டங்களில் அமைச்சர்களும் கலந்துகொண்டு வீர வணக்கம் செலுத்துவர்.

தமிழ் மேலும் வளர வழி காண்போம்

"தமிழ் மொழியை ஆராய்ந்து அதை மேலும் எவ்வாறு வளர்க்க வேண்டும் என்பதைக் கூற இங்கு உலகத் தமிழ் மாநாடு கூடுகிறது. அந்த மாநாட்டில் பல்வேறு நாடுகளிலிருந்தும் வந்துள்ள பிரதிநிதிகளை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன்; உள்நாட்டுத் தமிழறிஞர்களையும் வரவேற்கிறேன். தமிழ் மேலும் வளர அனைவரும் வழிவகை காணவேண்டும்."

--காமராசர்

(உலகத் தமிழ் மாநாட்டுத் துவக்கவிழா வரவேற்புரையில்)

தீச்சுடரும் தீந்தமிழ்ச்சுடரும்!

"வேறு மாநிலங்களில் வாழ்கின்ற மாணவர்கள் வேறுவேறு காரியங்களுக்காகத் தீச்சுடரை ஏந்துகின்றனர்! ஆனால் இங்கே தமிழுக்காக—தமிழ் வாழ்வுக்காக—அதுவும் திருக்குறள் உரைக்கோவை நடைபெறும் இம்மாநாட்டில் — மாணவர்கள் 'தமிழ்ச்சுடர்' ஏந்திவந்திருக்கின்றனர்; அவர்கள் பணியை வரவேற்று வாழ்த்துகிறேன்."

--இரா. நெடுஞ்செழியன்

(பூம்புகாரில்)

தமிழகத்திலிருந்தே உலக வரலாறு துவங்கும்?

"இந்திய வரலாற்றை மட்டுமல்ல—உலக வரலாற்றை எழுத வேண்டுமாயினும்கூட தமிழகத்தின் வரலாற்றிலிருந்துதான் தொடங்க வேண்டும்.

"பழம்பெரும் உலக மொழிகள் வரவர குன்றிவருகின்றன. ஆனால் பழந்தமிழோ புதுமைப் பொலிவுடன் வளர்ந்துகொண்டே செல்கிறது. தமிழைப்போல் வேறு எந்த மொழியும் வளர்ச்சி பெறவில்லை. எந்த வகையில் பார்த்தாலும் தமிழுக்குத் தொன்மையும் தொடர்ச்சியும் இருந்துவருகிறது."

--டாக்டர் மு.வ.

(உலகத் தமிழ் மாநாட்டில்)

அமைச்சர்

மு. கருணாநிதி இலங்கை அழைப்பு

அமைச்சர் திருச்செல்வம் சந்திப்பு

சென்னை, சன. 5—

இன்று மாலை 6-30 மணியளவில் இலங்கை உள்ளாட்சித் துறை அமைச்சர் திருச்செல்வம், தமிழ

(4-ம் பக்கம் பார்க்க)

மாநாட்டு வரவு - செலவு

பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும்

சென்னை, சன. 5—

"உலகத் தமிழ் மாநாட்டிற்காக மாவட்டந்தோறும் நிதி வசூலிக்கப்பட்டது; திருச்சி மாவட்டத்தில் மட்டும் ரூ. 33 இலட்சம் வசூலாகியது! இந்தப் பணம் முழுதும் தமிழ் மாநாட்டிற்குத் தேவைப்படவில்லை; ஆகையால், அந்தப் பணத்திலிருந்து மூன்று பல்கலைக் கழகங்களில் திருக்குறள் பற்றி ஆராய்ச்சி நடத்துவதற்காக ரூ 9 இலட்சம் கொடுத்துவிட்டோம்.

"அதே மாதிரி, 'அந்தந்த மாவட்டங்களில் வசூலிக்கப்பட்ட தொகையில், மாநாட்டுக்கான செலவுக்கு எடுத்துக் கொண்டது போக மீதியுள்ளதை அந்தந்த மாவட்டத்தில் நல்ல பணிகளைச் செய்வதற்குப் பயன்படுத்த வேண்டும்' என்று முதலமைச்சர் கூறிவிட்டார்.

"இந்த மாநாட்டிற்குப் பல குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன; அந்தக் குழுக்கள், தங்கள் பணிகளை முடித்த பின் நிச்சயமாக வரவு - செலவுக் கணக்குகளை வெளியிடும்."

புகழ் அனைத்தும் தமிழ் அன்னைக்கே!

"உலகத் தமிழர் மாநாடு, கட்சி வேறுபாடின்றி — அரசியல் காழ்ப்புணர்ச்சியின்றி—தமிழின் மேன்மை பேசப்படுகின்ற--தமிழை வளர்க்கின்ற மாநாடாக இருக்கும்!

"அரசியல் பகையுணர்வு காரணமாக—'இந்த மாநாட்டால் உண்டாகும் புகழ், யாருக்கோ போய்ச் சேரப் போகின்றது' என, யாரும் எண்ண வேண்டியதில்லை!

"'இந்தப் புகழ் அனைத்தும், தமிழ்த் தாயின் திருவடிக்கே' என்ற உணர்வுடன், தமிழ் மாநாட்டின் சிறப்பை ஓங்கச் செய்ய அனைவரும் உறுதுணையாக இருக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்."

தமிழ் மாநாட்டுத் திரைப்படம்

அமைச்சர் கருணாநிதி விளக்கவுரை

சென்னை, சன. 6—

உலகத் தமிழ் மாநாட்டையொட்டித் தமிழகத் திரைப்படத் தயாரிப்பாளர்கள் தயாரிக்கும் வண்ணப் படத்திற்குப் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் விளக்கவுரை தந்து பேசுவார்.

உலகத் தமிழ் மாநாட்டையும், எழில்மிகு ஊர்வலத்தையும் பல வண்ணப் படமாகத் தமிழகத் திரைப்பட அதிபர்கள் படம் பிடித்திருக்கின்றனர்.

அந்தத் திரைப் படத்தில் வரும் ஒவ்வொரு காட்சியையும் விளக்கி வர்ணனை தந்து பேசுகிறார் கருணாநிதி!

விரைவில் அத்திரைப் படம், தமிழகம் முழுவதிலும் திரையிடப்படும்.

புலவர் பெருமக்களுக்கு மாநகராட்சி வரவேற்பு

சென்னை, சன. 5—

உலகத் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்குப் பிரதிநிதிகளுக்கும், தமிழகப் புலவர் குழுவினருக்கும் சென்னை மாநகராட்சி இன்று மாலை வரவேற்பு அளித்தது.

மைலேடீஸ் பூங்காவில் வரவேற்பு - விருந்தோம்பல் நிகழ்ந்தது.

மேயர் டாக்டர் அபிபுல்லா பேக் வரவேற்றுப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"மாநகராட்சியின் சின்னத்தில் மும்மன்னர்களின் அம்பு—புலி—மீன் பொறித்திருப்பது, சேர—சோழ—பாண்டிய மன்னர்களின் நினைவு மங்காமல் காத்துவருகிறது.

தமிழ் இலக்கியம்—கலை—பண்பாடு உலகெலாம் பரவவும், வளரவும் இம்மாநாடு பெரும் ஊக்கத்தை உண்டாக்கும்.

இந்தக் கருத்தரங்கு, உண்மையில், 'நான்காவது தமிழ்ச் சங்கம்' என்று பெருமைப்படத்தக்க விதத்தில் அற்புதமாக அமைந்துவிட்டது."

புலவர் குழு சார்பில் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம், டாக்டர் எம். சுந்தரம் ஆகியோர் நன்றியுரைத்துப் பேசுகையில், 'மாநகராட்சி மன்றத்தின் விருந்தோம்பல், தமிழுக்கும்—தமிழகத்துக்கும் பெருமதிப்பு தருவதாகும்' எனக் கூறினர்.

புதிய சூழ்நிலை உருவாக தமிழக அரசு செயல்படும்

பூம்புகார் நகர், சன. 5—

"அன்றையத்தினம் புலவர்களுக்கு முரசு கட்டில்தான் தரப்பட்டது—இன்றையத்தினம் அரசுக் கட்டிலே தரப்பட்டிருக்கிறது; புலவருக்குப் புலவரான—புலவருக்குத் தோழரான—புலவருக்கு நண்பரான—புலவருக்குச் சகோதரரான—புலவர்களின் இதயமான பெரும்புலவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்தான், அரசு கட்டிலில் அமர்ந்திருக்கிறார்! தமிழ் உள்ளமும் கலை உள்ளமும் கொண்ட அமைச்சர்கள் அவரது அணியிலே இருக்கிறார்கள்!

"தமிழர்களின் கொற்றம் செழித்திட—தமிழர் நலம் அவனியெல்லாம் சூழ்ந்திட—தமிழரின் வாணிபம் செழித்திட—தமிழரின் பொருள், வளம் மேலும் மேலும் பெருகிட—தமிழர் வாழ்வில் குதூகலம் பொங்கிட—தமிழர் முகத்திலே புன்சிரிப்புத் தவழ்ந்திடும் புதிய சூழ்நிலையை உருவாக்கிட—அண்ணாவின் தலைமையில் அமைந்துள்ள தமிழக அரசு முனைந்து செயல்படும்!"

---மு. கருணாநிதி

(புலவர் குழு வரவேற்பில்)

தமிழக வரலாறு மறைக்கப்பட்டிருக்கிறது!

அவ்வப்போது தோன்றிய பெரியார்களால் வரலாற்றில் திருப்பங் கண்டோம்

அறிஞர் அண்ணா ஏற்படுத்திய திருப்பம் தமிழினத்தைத் தலைநிமிரச் செய்யும்

பூம்புகார் கருத்தரங்கில் பேராசிரியர் க. அன்பழகன்

உலகத் தமிழ் மாநாட்டையொட்டி, பூம்புகார் நகரில் 4-1-68 அன்று 'தமிழக வரலாற்றில் சில திருப்பங்கள்' என்ற தலைப்பில் நடந்த கருத்தரங்கில் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் ஆற்றிய பேருரையில், தமிழக வரலாறு மறைக்கப்பட்டுவிட்டதையும், அதனை மக்களுக்கு எடுத்துரைத்துப் பல திருப்பங்கள் ஏற்பட வழி காட்டியதையும் ஆதாரங்களுடன் விளக்கினர்; அவர் உரையின் சுருக்கம் வருமாறு:—

"அன்று—சேரனும், சோழனும், பாண்டியனும் படை திரட்டிப் போர் முரசு கொட்டிப் பாராண்டார்கள்—புகழ் பரப்பினார்கள்!

இன்று—படை திரட்டாமல், அறிவால்--பண்பால் அறிஞர் அண்ணா அவர்கள் அகில இந்தியாவையும் வெற்றிபெற இருக்கின்றார்கள்!

நாகரிகமில்லாதிருந்தபோது—காட்டுமிராண்டியாக இருந்த போது மொழி பிறந்தது; 'அப்போது பிறந்ததுதான் தமிழ்மொழி' என்ற கருத்தில்தான், 'காட்டுமிராண்டி மொழி' என்றார் பெரியார்! அப்படித்தான் நாங்கள், அவர் கூறியதற்கு அர்த்தம் கொள்கின்றோம்—அவரும் அப்படித்தான் கூறியிருப்பார்!

பெரியாரின் பெரும் படையில் இருந்தவர்தான் அறிஞர் அண்ணா அவர்கள்; அந்த இயக்கம்தான் பல போராட்டங்களுக்குப் பின் 1967-ல் திருப்பத்தை ஏற்படுத்தியது. அன்றைய நிலையில் நடைபெற்றுவந்த போராட்டங்களை, இன்றையத்தினம் எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள்.

அரசியல்வாதிகள் அன்றி எல்லாத் தரப்பினருடைய உள்ளத்திலேயேயும் இன்றையத்தினம், தமிழ் உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது! இது, இன்றுள்ள திருப்பம்—வேண்டிய திருப்பம்!

1890-ல் தமிழ் மொழி, கல்வித்துறையில்—நீதிமன்றத்தில் இல்லை; திரு. வி. க அவர்கள் தமிழின் தொன்மையையும் சிறப்பையும் எடுத்துக்காட்டி, 'இப்படிப்பட்ட தமிழுக்கு உரிமை எங்கே' என்று கேட்டார்!

தமிழில் நாடகம் இல்லாத குறையை—'தமிழில் நாடகம் எழுத முடியாது' என்று கூறி வந்தவர்கள் கருத்துக்களை ஒழித்துக்கட்டும் வகையில் சுந்தரம் பிள்ளை அவர்கள், நாடகத் தமிழை வளர்த்தார்கள்; 'மனோன்மணீய'த்தை எழுதித் தமிழுக்குச் சிறப்புச் செய்தார்கள்!

மொழித் துறையில் ஆரியம் தலைதூக்கி நின்றது! 'ஆரியம்' என்று மொழியை—வட மொழியைக் குறிப்பிடுகின்றேன்.

'மொழித் துறையில் ஆரியம் (வட மொழி) உயர்ந்தது' என்று கூறி வந்தார்கள்.

வலது கண் வட மொழி' என்றும், 'இடது கண் தமிழ் மொழி' என்றும் கூறிவந்தார்கள்.

'சிவபெருமான் உடுக்கின் வலது பக்கத்து ஒலி வட மொழி' என்றும் 'இடது பக்கத்து ஒலி தமிழ்' என்றும் கூறலானார்கள்.

பின்புதான் பாதிரிமார்கள், மதப் பிரச்சாரத்திற்காகத் தமிழ் நாட்டிற்கு வந்தார்கள்; இங்கு வந்தவர்கள், தமிழ் மொழி ஆராய்ச்சியில் ஈடுபட்டு நமக்கு வழிகாட்டினார்கள்; நாம் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

கால்டுவெல் இல்லையென்றால்—திரு. வி. க., மு. வ. போன்ற பெரியவர்கள் நமக்குக் கிடைத்திருக்கமாட்டார்கள்; இன்றையத்தினம் பன்மொழிப் புலவர் அவர்களின் ஆராய்ச்சிகளெல்லாம் ஆதாரமாகஇருப்பது, கால்டுவெல் ஆராய்ச்சிதான்.

இந்தியாவின் வரலாற்றில் தமிழக வரலாறு--தமிழ் வரலாறு மறைக்கப்பட்டிருக்கிறது!

இன்றையத்தினம் நாம், இப்படி மொழிப் பற்றில் உணர்ச்சியைப் பாய்ச்சிக் கொண்டிருக்கும் வேளையில் வடக்கே உள்ளவர்கள் இதை மதிக்காது, நமது மொழிப் பற்றைத் தவறாக எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்!

தாய்மொழியாகக் கொள்ளாத வெளிநாட்டார்களெல்லாம் தமிழைப் போற்றக் காரணம், அவர்கள் ஆராய ஆராயப் பல புதுமைகள்--உண்மைகள் இருக்கின்ற காரணத்தினால்தான்! தமிழுக்கு இருக்கின்ற தனிச் சிறப்பு, உலகில் வேறு எந்த மொழிக்கும் இல்லை என்பதை எல்லோரும் அறிந்திருக்கிறார்கள்!

இந்தியாவில் உள்ளவர்கள் இதை உணராவிட்டால் உலகத்து அறிஞர்கள் உணர்ந்திருக்கிறார்கள்! தமிழ்ப் பண்பு பற்றியும், வரலாறு—சிறப்பு ஆகியன பற்றியும் எல்லோரும் அறிந்துகொள்ளும் வகையில்தான், 'தமிழக வரலாற்றில் சில திருப்பங்கள்' என்ற சிறப்புரை நடைபெறுகிறது.

தமிழ் வாழ—தமிழக அரசு வாழச் செயல் புரியுங்கள்!"

ஜப்பானின்சாதனை

டோக்கியோ, சன. 6—

இந்தப் பருவத்தில் ஜப்பானின் அரிசி விளைச்சல் இதுவரை இல்லாத சாதனையாக இருக்குமாம்.

அரிசி விளைச்சல் மொத்தம் 1 கோடியே 44 இலட்சம் டன் என்று மதிப்பிடப்பட்டுள்ளது: இது 62-ம் ஆண்டுச் சாதனை விளைச்சலைவிட 14 இலட்சம் டன் அதிகமாகும்.

நிலவுக்குச் செல்லும் மனிதன்!

நியூயார்க், சன. 6—

இறுதியாக மனிதரை நிலவில் இறக்கப் பயன்படுத்தவிருக்கும் 'லூனர் மோடுல்' என்ற அமெரி[illegible]காவின் ஆளில்லா முதல் வி[illegible] வெளிக் கலம் சனவரி 17-ம் நா[illegible] ஏவப்படவிருக்கிறது.

இச்சோதனைகளிலிருந்து, மனிதனை நிலவில் இறக்க இந்த விண்வெளிக்கலம் பயன்படுமா என்பது உறுதியாகும்.

ஐந்தாண்டில்தமிழ் உலகமொழியாகும்

அண்ணா ஆட்சியால் தமிழுக்கு நல்ல காலம் பிறந்தது

'அழகான நம் வரி வடிவத்தை மாற்ற ஒருபோதும் ஒப்போம்'

யோகி சுத்தானந்த பாரதியின் உணர்ச்சி முழக்கம்

"தமிழ் அழகுடையது; இதன் வரி வடிவம், பன்மொழி வரி வடிவம் அனைத்தையும் தன்னகத்தே கொண்டது; இதனைத்தான் திருத்த வேண்டுமென்று சிலர் சொல்கிறார்கள்; தமிழர் ஒருநாளும் இதற்கு ஒருப்படமாட்டார்கள்"

என்று யோகி சுத்தானந்த பாரதியார், உலகத் தமிழ் மாநாட்டு முதல் நாள் நிகழ்ச்சியில் பேசுகையில் குறிப்பிட்டார்; அவர் மேலும் பேசியதாவது:—

"அண்ணா அவர்களின் ஆட்சியில் தமிழுக்கு நல்ல காலம் தோன்றியுள்ளது.

அண்ணாவைப் பற்றி நினைக்கும் போது, கம்பராமாயணத்தில் வருகிற பாட்டொன்றே நினைவுக்கு வருகின்றது! தாயொக்கும் அன்பை அவரிடம் காண்கிறோம்! அவரை நாம் காணும் போது தலைவராக அல்ல—அன்புள்ள நண்பராக - தோழர[illegible]கவே காட்சி தருகிறார்!

அவரது தவம், தமிழ்நாட்டி[illegible] நலம் பயக்கும் தவமாகும்!

குடியரசுத் தலைவரின் முன்னால் அவர், மார்தட்டிப் பேசினார்—'தமிழர், தமக்குள்ளதை ஒரு போதும் இழக்கச் சம்மதிக்க மாட்டார்கள்' என்று! அந்தப் பேச்சில் கடுமையில்லை—ஆனால் ஒளியூட்டும் உள்ளக் கனல் இருந்தது!

இதுவரையில், வடமொழியைக் கொண்டு தமிழை அளந்தோம்! இனி, தமிழைக்கொண்டு பிற மொழிகளை அளப்போம்!

தமிழுக்கு வந்த நோய்களைப் போல் வேறு எம்மொழிக்கும் வந்திராது! 30 ஆண்டுகளுக்கு முன்னாலும்கூட, 'தமிழ் இனிப் பிழைக்காது' என்று கூறியவர்கள் உண்டு! ஆனால், தமிழ், அத்தகையோரை மீறி வளர்கிறது—வாழ்கிறது!

இரண்டே மணி நேரத்தில், 'உலா'லின் மூலமும் — கடற்கரைப் பேச்சின் மூலமும் தமிழ்ப் பண்பாட்டைப் படைத்துக் காட்டினோம்!

முல்லைக்குத் தேர் ஈந்த பாரி வள்ளலைப் பார்த்தபோதும், தமிழுக்குத் தலைகொடுத்த குமணனைக் கண்டபோதும், குடியரசுத் தலைவர், 'ஏ அப்பா! இத்தனைச் சிறப்பா' என்று மூக்கின்மேல் விரல் வைத்தார்!

தமிழன் என்றுமே, 'உலகு' என்றுதான் பாடியிருக்கிறான்—மொழிந்திருக்கிறான்! அதுவே தமிழின் மரபு! 'நான், நான்—என் சாதி, என் சாதி' என்று அலைவது, தமிழன் மரபு அல்ல!

பழந் தமிழ் இலக்கியப் பெருமையை மட்டும் நினைத்திருந்தால் போதாது—'நாளை எப்படி இருக்க வேண்டும்' என்பதுபற்றியும் யோசிக்க வேண்டும்!

தமிழில் விஞ்ஞான நூல்கள் வெளிவருவதற்கு, தக்க புலவர்களிடம் அப்பணியை ஒப்படைக்க வேண்டும்.

சோவியத் இரஷ்யாவில் எனக்கு எழுத்தாளர்கள் விருந்தளித்தார்கள்; 'கீதையை இரஷ்ய மொழியில் பெயர்த்திருக்கிறோம்' என்கிறார்கள்! 'சமஸ்கிருதமே முதல் மொழி' என, பொலன்கி என்ற அம்மையார் என்னிடம் சொன்னார்கள்; 'இல்லை; தமிழே முதன் மொழி' என்றேன்.

கீதையில், 'தனக்கே சமைத்துத் தானே உண்பவன் பாபம் செய்தவன்' என்று இருப்பதைச் சுட்டிக்காட்டி, 'இது, கம்யூனிசம்' என்கிறார்கள்!

'பகுத்துண்டு பல்லோர் ஓம்புதல்' என்று துவங்கும் குறளை எடுத்துரைத்து, 'இப்படித் திருவள்ளுவர் கூறியுள்ளார்; எனவே, தமிழில் உள்ள இக்கருத்து

(3-ம் பக்கம் பார்க்க)

'தமிழால் முடியாது' என்பார் இனி தமிழ்நாட்டில் வாழ முடியாது

பூம்புகார்க் குரலுக்குப்பின் நம்மை மதியாதார் குரல் மங்கும்!

தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கில் டாக்டர் மு. வரதராசனர் முழக்கம்

சென்னை, சன, 4—

உலகத் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கில், 'தமிழக வரலாற்றில் திருப்பங்கள்' என்ற தலைப்பில் டாக்டர் மு. வரதராசனர் அவர்கள் உரையாற்றுகையில், 'இந்திய வரலாற்றை மட்டுமல்ல—உலக வரலாற்றையே தமிழகத்திலிருந்துதான் எழுதத் தொடங்கவேண்டும்' என்றார்; அவர் மேலும் பேசியதாவது:—

"உலக மொழிப் பண்பாட்டின் நாகரிகத்தில் தொன்மையானது தமிழும், தமிழகமும்தான்.

நூற்றுண்டுதோறும் புதுப் புதுப் புதுமைகள் தமிழில் ஏற்பட்டு வருகின்றன; உலக மொழிகளில் வேறு எதிலும் அப்படி இல்லை.

சமையல் அறைகள்கூட நமது பண்பாட்டைக் காட்டும்.

தமிழ் இசை, நாட்டியக் கலை போன்றவற்றை உலகத்தார்கள் ஆராய்வார்களானால், காலமெல்லாம் அந்த ஆராய்ச்சியைத் தொடங்குவார்கள்.

இன்று தமிழகத்துத் தஞ்சையின் சிறப்புச் செழிப்புக்குக் காரணம், மன்னன் கரிகால் சோழனே! அந்தக் காலத்திலேயே, மக்கள் வறுமையின்றி வாழமேண்டுமென்று பாசன முறையைச் சிறப்பான முறையில் ஏற்படுத்தி, உழவர் குடிகளை உயர்வடையச் செய்தான்!

கரிகாலன், போரிலும் கலையார்வத்திலும் மொழிப் பற்றிலும் உள்ள ஆர்வத்தை உற்பத்தியிலும் காட்டினான்; அதனால்தான், இன்று தஞ்சையும் திருச்சியும் வளமான இடங்களாக விளங்குகின்றன!

கரிகாலன் சிறப்பாக ஆண்டது மல்லாமல், மக்களை வறுமை இல்லாது வாழவைத்து, அன்றே தனது ஆட்சி முறையில் திருப்பத்தை ஏற்படுத்திக் காட்டினான்!

'அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் அற்றே — செல்வத்தைத் தேய்க்கும் படை' என்று கூறினார்; இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன்பே திருவள்ளுவர், 'மன்னர்கள், ஆட்சியில் நீதி நழுவினால் இப்படி ஆகும்' என்று—கொடுங்கோல் இல்லாத இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே—அறிவுரை வழங்கிவிட்டார்!

மதுரையில் ஆண்ட பாண்டியன் நெடுஞ்செழியனிடம், கண்ணகி, தன் கணவனை ஆராயாது கொன்றுவிட்டதாக அரசு நீதி மன்றத்தில் வழக்குரைத்தாள்; உண்மையை அறிந்த மன்னன், 'நீதி தவறிய யானே அரசன்—நானே கள்வன்' என்று கூறி, 'தவறாத நீதி தவறிவிட்டதே' என்று உயிரையே மாய்த்துக் கொண்டான்—என்று வரலாறு கூறுகிறது!

இந்தக் காட்சி, வள்ளுவர் கூறியதற்கு ஒப்பாக ஏற்பட்டிருக்கிறது! நீதித் துறையில் ஒரு திருப்பத்தை நாம் பார்க்கிறோம்!

இந்த நாட்டில், சாதி முறை, பல்லவர் காலத்திலேதான் வேரூன்றியது! அவர்கள் காலத்தில் கலைகள் வளர்ந்தன என்றாலும், பல தீமைகளும் வளர்ந்தன! ஆக, நல்லதும் கெட்டதுமாக அவர்கள் காலம் காணப்பட்டது!

மொழியைப் பரப்பியதில் வட மொழியாளர்கள், தமிழுக்கு இடந் தராமலே பரப்பினார்கள்!

வட மொழியை—அதை ஓரளவுக்கு மாற்றித் தமிழில் ஒரு திருப்பத்தை ஆழ்வார்களும், நாயன்மார்களும் செய்தார்கள்!

பின்பு ஆங்கிலேயர் ஆட்சியினால் நன்மைகளும்— தீமைகளும் இரண்டுமே ஏற்பட்டன!

நன்மை — அவர்களால் உலக உறவு; தீமை—அடிமை' வேறு யாரிடம் அடிமைப்பட்டிருந்தாலும், உலக உறவு ஏற்பட்டிருக்கலாம்; ஆனால் பெருந்தன்மையுள்ளவர்களிடம் — உரிமையை உணர்ந்தவர்களிடம் அடிமையாக இருந்தோம்! அவர்கள், தமிழின் பெருமையை -- வரலாற்றை நமக்கு எடுத்துச் சொன்னார்கள்!

தமிழன், 'தமிழில் என்ன இருக்கிறது' என்று கேலி பேசிய நேரத்தில், தமிழன் சிறப்பை ஆங்கிலேயர்கள் சொன்னார்கள்! கால்டுவெல்லும், போப்பும் ஆராய்ந்து, உலகத்தில், 'தமிழ்போல் சிறந்த மொழி வேறு இல்லை' என்றார்கள்!

தமிழுக்கும்—வட மொழிக்கும் சொந்தமான சொற்களை, 'வட மொழிககே சொந்தம்' என்று முன்பு முடிவுகட்டிக் கூறினார்கள். இதையெல்லாம் கால்டுவெல் ஆராய்ந்து உண்மையைக் கூறினர்; 'வட மொழியில் இருப்பவை, தமிழிடம் கடன் வாங்கிய சொற்கள்தான்' என்று அவர் கூறினார்.

அடிமைக் காலத்தில் உரிமைச் சுவையை ஊட்டியவர்கள் பாரதியும் பாரதிதாசனும் ஆவர்.

பாரதி — விடுதலை உணர்வை உண்டாக்கினார்! பாரதிதாசன் —மொழிப் பற்றை -- இனப் பற்றை உண்டாககினார்!

பாரதியார், 'எல்லாம் தமிழ்மயமாக வேண்டும்' என்று கூறி, பெரும் திருப்பத்தைக் கொண்டு வந்தார்; அதன்பின், 'தமிழ் நாட்டில் தமிழ் ஆளவேண்டும்' என்று ஒரு புதிய திருப்பம் உண்டாக்கபபட்டது! அதன்பின்புதான் இந்தப் பூம்புகார்!

இந்தப் பூம்புகாரின் குரலுக்குப் பின், இனி நம்மை மதியாதார் குரல் மங்கும்—ஒழியும்!

'தமிழில் முடியாது என்பவர்கள், தமிழ்நாட்டில், இனி வாழமுடியாது' என்ற நிலை ஏற்பட்டுவிட்டது! இது ஒரு திருப்பம்!"

நோய் நாடி அதன் முதல் நாடுவதில் தமிழ் மருத்துவத்தின் தனிச் சிறப்பு

மேலைநாட்டு விஞ்ஞானக் கருவிகளைவிட சிறந்தது

ஆராய்ச்சி மாநாட்டில் தமிழ் மருத்துவ அறிஞர்கள் உரை

'சித்த மருத்துவத்தை வளர்த்துப் பரப்ப அரசு ஊக்கமளிக்கும்' என அமைச்சர் அறிவிப்பு

சென்னை, சன. 5—

"இத்திங்கள் இறுதிக்குள் அரசுத் தலைமைச் செயலகத்தில் சித்த மருத்துவத்திற்காக மருத்துவமனை ஒன்று திறக்கப்படவிருக்கிறது"

என்று, சுகாதாரத்துறை அமைச்சர் திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா, உலகத் தமிழ் மாநாட்டையொட்டி நேற்று நடைபெற்ற சித்த மருத்துவத்துறை மாநாட்டிற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் அறிவித்தார்.

"திருச்சியில் உள்ள அரசுத் தலைமை மருத்துவமனையி . சித்த மருத்துவத்திற்காகப் பத்துப் படுக்கைகள் கொண்ட பிரிவு ஒன்று ஏற்படுத்தப்படும்" என்றும் சொன்னார்.

"சித்த மருத்துவத்திற்குத் தேவையான வசதிகளையெல்லாம் செய்துகொடுக்க அரசு ஆயத்தமாக இருக்கும்" என்றும் அவர் தெரிவித்தார்.

ஜி. டி. நாயுடு

'எக்ஸ்-ரே' எடுத்தல்—அறுவைச் சிகிச்சை செய்தல் ஆகியவற்றைத் தவிர மற்றத் துறைகளில் 'அலோபதி' வைத்திய முறையை அடியோடு நீக்கிவிட்டுச் சித்த மருத்துவ முறையைக் கொணர வேண்டும்"

என்று, கோவை தொழிலதிபர் திரு. ஜி. டி. நாயுடு வேண்டுகோள் விடுத்தார்.

பூம்புகார் நகரில் நடந்த இந்த மாநாட்டில் பேசிய ஜி. டி. நாயுடு மேலும் கூறியதாவது :—

"அணு விஞ்ஞானம், மின்னணு இயந்திரங்கள், விண்வெளி விஞ்ஞானம் ஆகியவற்றில் கவனம செலுத்துவதைவிட, சித்த வைத்தியத் துறையில் கவனம் செலுத்த வேண்டியது இன்று மிகவும் இன்றியமையாததாகும்.

சித்த வைத்தியம் எளிதானது; மிகவும் குறைந்த செலவில் கிடைப்பது; இத்தகைய அரிய சித்த வைத்தியத்தை உலகம்—ஏன்—இந்தியாவில் உள்ள பல மாநிலங்களே அறிந்துகொள்ளவில்லை!

சிறந்த மருந்து உண்டு

புற்று நோய்க்கு மருந்து கண்டுபிடிக்க அமெரிக்காவும், இரஷ்யாவும், இங்கிலாந்தும் இலட்சக் கணக்கில் செலவு செய்கின்றன; ஆனால், புற்று நோய்க்குச் சிறந்த மருந்து தமிழ்நாட்டில் கிடைக்கிறது; இதற்காக ஓர் இலட்சம்கூடச் செலவு செய்து ஆராய்ச்சிகள் செய்யப்படவில்லை.

சித்த வைத்தியத்தின் சிறப்பை உணர்ந்துள்ள தற்போதைய அமைச்சர்கள் மற்ற நாடுகளின் கூட்டுறவோடு இலட்சக்கணக்கில் செலவிட்டு இதுபற்றி ஆராய்ச்சி செய்யவேண்டும்.

'அலோபதி' முறையில் பல அரிய கண்டுபிடிப்புகள் வெளிப்பட்டுள்ளன என்றாலும், அவை ஒரு விதத்தில் குணம் தருகின்றன; மற்றொருபுறத்தில் வேறு விதமான தீங்குகளும் ஏற்படுத்துகின்றன; ஆனால், சித்த மருத்துவத்தின் மூலம் நோயைச சரியான முறையில் அறிந்துகொண்டு மருந்துகளைப் பயன்படுத்தினால் எத்தகைய தீங்கும் எற்படுவதில்லை; இதற்கு ஆகும் செலவும் குறைவு.

'ஸ்டெதஸ்கோப்' — 'எக்ஸ்-ரே' ஆகியவற்றின் மூலம் நோயைக் கண்டுபிடிப்பதைக் காட்டிலும், நாடித் துடிப்பின் மூலம் நோயை அறிந்துகொள்ள சித்த மருத்துவத்தில் சிறந்த முறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. மூலிகைகளின் மூலம் நோயை நீக்குவதும், எலும்பை ஒட்டவைக்கும் அரிய முறைகளும் சித்த மருத்துவத்தில் இருக்கின்றன."

பின்னர், திரு. ஜி. டி. நாயுடு அவர்கள், 'சத சஞ்சீவினி' என்னும் செடியின் வாடிய வேரையும், வாடிய இலைகளையும் கொதிக்கும் நீரில் போட்டார்; ஒரு நிமிட நேரத்தில் வேர் பசுமையாகக் காட்சி அளித்தது; இலைகள் துளிராக மாறின!

இத்தகைய அரிய சிறப்புக்கள் பெற்ற இராமபாணம்—மயூரசகி—நன்னு—என்ற வேர்களும் இருப்பதாகவும், அவைகளைக் கொதிக்கும் நீரில் போட்ட ஒரு இமைப்பொழுதில் நேரத்தில் பசுமை பெற்றுவிடும் என்றும் அவர் கூறினார்.

ஏ. கோவிந்தசாமி

மாநாட்டைத் துவக்கிவைத்துப் பேசிய வேளாண்மை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி தமது உரையில் கூறியதாவது :—

"மேல்நாட்டு மருத்துவ முறை தமிழ் நாட்டிற்கு வருவதற்கு முன்பாக நமது சித்தர்கள், சித்த வைத்திய முறையைப் பயன்படுத்தி வந்தார்கள்; அந்த அரிய வைத்திய முறையை உடன் இருந்த சீடர்களுக்குக் கூடச் சரியாக எடுத்துச் சொல்லவில்லை; அதனால்தான் சித்த மருத்துவம் சிதைந்துவிட்டது.

சித்த மருத்துவம் குறைந்த செலவில் நோயைப் போக்கவல்லது; இதற்கு வேண்டிய உதவிகள் செய்யப்படும்."

இரத்தினவேல் சுப்பிரமணியம்

டாக்டர் இரத்தினவேலு சுப்பிரமணியம் பேசுகையில் கூறியதாவது :—

"நினைத்ததைச் செய்யக்கூடியவர்கள் சித்தர்கள். சித்த மருத்துவத் துறையில் ஈடுபட்டவர்கள் சிலர் நேர்மையுடனும், ஒழுக்கத்துடனும் நடந்துகொள்ளாததால் இந்த முறை அழியத் தொடங்கியது.

'சித்த மருத்துவத்தை வெளிப்படையாகத் தெரியப்படுத்தக் கூடாது' என்ற முறையிலும் பலர் மறை பொருளாக எழுதிவைத்தார்கள்; அதுவும் அதன் அழிவுக்குக் ஒரு காரணமாகும்.

"ஆகவே, சித்த வைத்தியர்கள், தங்களுக்குத் தெரிந்ததை வெளிப்படுத்த வேண்டும்."

காயிதே மில்லத்

முஸ்லிம் லீக் தலைவர் காயிதே மில்லத் முகம்மத் இசுமாயில் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"சித்த மருத்துவ முறையில் அற்புதமான மருந்துகள் இருக்கின்றன; அம்மருந்துகள், நோய்களை வெடி வைத்துத் தகர்ப்பது போல் தகர்த்துவிடும். சித்த வைத்தியத்தைப் பற்றி உள்ள பல்வேறு நூல்களையும் சேகரித்து அவைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்து தரம் பிரித்து வெளியிட அரசு முன்வர வேண்டும்."

எஸ். சி. அழகப்பன்

மேஜர் ஜெனரல் எஸ். சி. அழகப்பன் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"இந்தோனேசியாவில் சித்த மருத்துவ முறை புகழ் பெற்று விளங்குகிறது; அகத்திய முனிவரை அவர்கள் வணங்குவதற்கு இதுவே முக்கியக் காரணமாகும்."

கி. ஆ. பெ. விசுவநாதம்

திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"சித்த மருத்துவத்தின் சிறப்பு, உணவே மருந்தாக இருப்பதும் மருந்தே உணவாக இருப்பதும் தான்.

சித்த மருத்துவத்திற்கு உசவும் மூலிகைகளைப் படம் பிடித்து அவை பற்றிய நூல் ஒன்று வெளியிட அரசு முன்வர வேண்டும்.

சித்த மருத்துவ முறையைப் பரப்ப அதற்கெனத் தனியாக ஒரு இயக்குநரை நியமிக்க வேண்டு."

தலைமை மாகாண மாஜிஸ்திரேட் திரு. வி. பலராமையா எழுதிய 'உங்கள் வீட்டில் சித்தர் மருந்து' என்ற நூலை பண்டித எஸ். எஸ். ஆனந்தம் வெளியிட்டார்.

"உலகத் தமிழ் மாநாட்டில் சித்த மருத்துவத் துறை மாநாடு நடத்துவதற்காக திரு. கி. ஆ. பெ விசுவநாதம் ரூ 10 000மும், திரு. கருமுத்து தியாகராசன் ரூ. 5,000-மும் வழங்கியுள்ளனர்"

என்று சுகாதார அமைச்சர் திரு சாதிக்பாட்சா தெரிவித்தார்.

ஐந்தாண்டில் தமிழ்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

'சூபர் கம்யூனிசத்'தைக் குறிப்பதாக இல்லையா?" என்று கேட்டேன்.

தமிழும் தமிழனும் உயர்ந்து வருகிறார்கள்—இன்னும் உயர வேண்டும்.

'நாடென் நாடா வளத்தன' என்றார் வள்ளுவர்; நாடாத வளத்தை நாம் பெறவேண்டும்.

இந்தியப் பேரரசைத் தமிழர்களிடம் ஒப்படைத்தால், ஒரு படி அல்ல—இரண்டு படியும் போடுவோம்! தமிழரிடம் அதற்கான வீரமுண்டு—அறிவு உண்டு!

பம்பாயிலே 'சிவசேனை'க்காரர்களைப் பார்த்தேன்; நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்ட கொய்னு நகரைப் பார்த்துவிட்டு வரப் போனபோது சிவசேனைக்காரர்கள் என்னுடன் பயணம் செய்தார்கள்; 'தமிழைத் தெரியுமா?' என்று கேட்டேன்; 'நாங்கள் தமிழ் மொழியைப் பற்றி எதுவும் சொல்லவில்லையே' என்று பதிலளித்தார்கள்; 'பின் என்ன சொல்கிறீர்கள் என்று கேட்டேன்; 'மதராஸ் வாலா'க்களைப் பற்றித்தான் சொல்லுகிறோம்' என்றார்கள். 'ஓகோ! பொறுங்கள்; விரைவில், நீங்கள் அப்படிச் சொல்லமுடியாதவாறு 'அண்ணு நகர்' என்று பெயரை மாற்றிவிடுகிறோம்' என்றேன்!

தமிழர்களாகிய நாம் 'அண்ணு யுகம்' வரையில் வந்துள்ளோம!

நம் தமிழ் மொழி, உலக மொழியாதல் வேண்டும்!

ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், இரஷ்யா போன்ற உலகமொழியாக தமிழ் ஆகவேண்டும்!

எல்லோரும் கூட்டுறவாகச் சேர்ந்தால், இன்னும் ஐந்தாண்டுகளில் தமிழை உலக மொழியாக ஆக்கிட முடியும்!"

வீழ்ச்சியுற்ற தமிழகத்தில் எழுச்சி ஏற்படுகிறது!

மனித சமுதாயத்தின் இனிய வரலாறு தொடங்கட்டும்!

திருக்குறளைத் தேசிய — உலகப் பேரிலக்கியமாக்க வேண்டும்

குன்றக்குடி அடிகளார் கருத்துரை

பூம்புகார் நகரில் 5-1-63 அன்று நடைபெற்ற திருக்குறள் உரை விளக்கக் கோவையைத் தொடக்கிவைத்து, குன்றக்குடி அடிகளார் அவர்கள் ஆற்றிய உரையில் குறிப்பிட்டதாவது :—

"ஊக்கத்தையும் உழைப்பையும் மையமாகக் கொண்டு வளர்ந்த தமிழினம், நாளையும் கோளையும் அவ்வழிப்பட்ட அதிட்டத்தையும் நம்பத் தலைப்பட்டது!

ஊழையும் உப்பக்கம் காணும் கொள்கை கண்ட இனம், 'தலைவிதி' என்ற தத்துவத்தின் தாளடியில் சிக்கிச் சீரழிந்தது!

"உயர்ந்த திருக்குறளைப் பயிலாமல்—ஒரு குலத்திற்கொரு நீதி உரைக்கும் நூலையும், நடுவாக நன்றிக்கண் தங்காமல் அநீதிக்கும் நீதிக்கும் சமரசம் செய்துவைக்கும் நெறியல்லா நெறியை நெறியெனக் காட்டிய நூலையும் பயின்று வீழ்ச்சியுற்றது.

இந்த வீழ்ச்சியிலிருந்து தமிழகத்தை எடுத்து நிறுத்த இந்த நூற்றாண்டில் சிறந்த சான்றோர் அடுத்தடுத்து முயற்சி செய்து வந்துள்ளனர்—வருகின்றனர்!

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு திருவள்ளுவர், ஓர் உலகக் கருத்தைக் கண்டு காட்டினார்; இவர்தம் நூலே ஓர் உலகக் கருத்தை மையமாகக் கொண்டு விளங்குகிறது; இவர்தம் ஓருலகக் கருத்து, அச்சத்தில் விளைந்ததன்று—அன்பில் விளைந்தது!

பெரும்பாலும் நூல்கள், தன் நாடு—தன மொழி—தன் இனம்—தன் சமயம் ஆகியனவற்றை சிறப்பித்தே எழுதப்பெறும்.

ஒரோ வழி தம்முடையதைச் சிறப்பித்தும், மற்றையதை இழித்தும் எழுதப் பெறுவதும் உண்டு; திருக்குறள், இந்தக் குறைகளினின்று முழுதும் நீங்கிய நூல்!

திருக்குறளில், 'தமிழ்' என்ற சொல் இல்லை; 'தமிழன்' என்ற சொல்லும் இல்லை! பெயர் குறிப்பிட்ட காடு—மலை—ஆறு—நாடு ஆகியவை பற்றிய செய்திகளும் இல்லை! எந்தக் கடவுளின் பெயரும் இல்லை! எந்தச் சமயச் சின்னங்களும் இல்லை!

ஆதலால், திருக்குறள் இனச் சார்பற்ற நூலாக—நாடும் எல்லையும் கடந்த நூலாக—மனித குலத்தின் பொது நெறி நூலாகத் திகழ்கிறது!

ஒருமைப்பாடு என்பது, சிந்தனையினால்—உணர்வினால்—குறிக்கோளால்—வாழ்க்கை அமைப்பால் ஒன்று கலந்து இருப்பதாகும்.

இத்தகு ஒருமைப்பாட்டை, அரசுகளால் தோற்றுவிக்க முடியாது—அறநெறியினாலேயே முடியும்!

அதனாலன்றோ, கார்லைல் என்ற பேராசிரியர், 'மக்களை இணைத்துப் பிணைக்க வலிமை பெற்ற ஒரு தேசிய இலக்கியம் வேண்டும்' என்று குறிப்பிடுகின்றார்.

இன்றைய உலகத்தை இணைக்க உலகப் பேரிலக்கியமாகத் திகழ்வது திருக்குறளேயாம்!

பாரதியும், 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று பாடிப் பரவுகின்றார்!

இந்தியப் பேரரசு இந்திய ஒருமைப்பாட்டைப் பெரிதும் விரும்புகிறது—விரும்பி வற்புறுத்துகிறது!

இந்திய ஒருமைப்பாட்டை, வலிமை பொருந்திய மத்திய ஆட்சியின் அதிகாரத்தாலும் இந்தி மொழியாலும் காணமுடியும் என்று நம்புகிறது! இது வெறும் கானல் நீரே!

இந்திய நாட்டின் இணையற்ற தேசிய இலக்கியமாகத் திருக்குறளை ஏற்றுக்கொண்டு, இந்திய நாட்டு மக்கள் அனைவரும் திருக்குறள் சிந்தனையிலும், திருக்குறள் நெறி வாழ்க்கையிலும் ஈடுபடச் செய்தால் இந்திய ஒருமைப்பாடு தானே உருவாகும்!

இந்திய நாட்டின் தேசிய இலக்கியமாகவும் உலகப் பேரிலக்கியமாகவும் திருக்குறள் விளங்கி அமையும் நாளே, மனித சமுதாயத்தின் இனிய வரலாறு தொடங்கும் நாள்!

தமிழ், மொழியாக மட்டும் வளரவில்லை; நாகரிகம்—பண்பாடு—சமயம் ஆகியவற்றையும் தழுவி வளர்ந்திருக்கிறது!

தமிழ், வாழ்க்கையை 'ஏனோ தானோ'வென்று கணிக்கவில்லை; வாழ்க்கையை வாழ்க்கையாகவே பார்க்கிறது. ஏன்? வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல் தமிழ் தந்த பாடம். இன்று, நேற்று? — இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பேயாம்!

'உலக மொழி' என்று பாராட்டப்படுகின்ற ஆங்கிலத்திலும், மொழி பேசும் மக்களின் வாழ்க்கைக்கு இலக்கணமில்லை!

இந்திய நாட்டின் இணைப்பு மொழியாக செயற்கைக் கோலம் தாங்கும் இந்தியிலும் வாழ்க்கைக்கு இலக்கணமில்லை—ஏன்—இந்திய நாட்டின் சமயத்திற்குரிய மொழி என்று—பாசம் ஒன்றின் காரணமாகவே சிலரால் பாராட்டப்பெறும் சமஸ்கிருதத்தில்கூட, வாழ்க்கைக்கென்று முறையான இலக்கணமில்லை!

தமிழில் எழுத்து — சொல் — பொருள் என்ற அமைப்பில் இலக்கணத்தை மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தொல்காப்பியர் இயற்றித் தந்துள்ளார்.

தமிழிலக்கிய வழக்கில், 'பொருள்' என்றால் 'பயன்' என்றே கொள்ளப்பெறும். மொழியின் பயன் நல்வாழ்க்கையேயாம்; ஆதலால் தொல்காப்பியர், பொருளாதாரத்தில்—தனி மனிதன், வாழ்க்கைத் துணையுடன் கூடி வாழும் மனையற வாழ்க்கைக்குரிய நெறிமுறைகளை அகத்திணை இயலிலும், அவனே சமுதாயத்துடன் தொடர்பு கொண்டு வாழ்வதற்குரிய நெறிமுறைகளைப் புறத்திணை இயலிலும் இலக்கணமாக வகுத்துச் செய்துள்ளார்; இத்தகு சிறப்புடை மரபில், உலகு புகழ் திருக்குறள் தோன்றிற்று!"

காந்தியார் படத் திறப்பு

திருமயம் கிளை நூலகம் இடமாற்றம் செய்யப்பட்டு அங்கு காந்தியார் படத் திறப்பு விழா 15—12—67-ல் நடைபெற்றது.

ஊராட்சிமன்றத் தலைவர் ஆறுமுகம் தலைமைவகித்து காந்தி படத்தைத் திறந்துவைத்தார்.

பூம்புகாரில்...

முதல் நாள்

சென்னை, சன. 5—

உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்கு மாநாட்டையொட்டி, சென்னைத் தீவுத் திடலில் பூம்புகார் நகரில் நேற்றுக் காலை மாநகர மேயர் டாக்டர் அபிபுல்லா பேக் அவர்கள், மாநாட்டுக் கொடியினை ஏற்றிவைக்க—துணை மேயர் திரு பவளவண்ணன் வரவேற்புரையாற்ற—பூம்புகார்த் தமிழ் விழா நிகழ்ச்சிகள் துவங்கின.

பேராசிரியர் க. அன்பழகன் எம்.ஏ., எம்.பி. அவர்கள் தலைமையில், 'தமிழக வரலாற்றில் சில திருப்பங்கள்' என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது.

சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர் திரு. பி. ஜி. கருத்திருமன், கருத்தரங்கைத் துவக்கிவைத்து உரை நிகழ்த்தினார்.

தலைமையுரைக்குப்பின், டாக்டர் மு. வரதராசனார், பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார், யோகி சுத்தானந்த பாரதியார், டாக்டர் எம். சுந்தரம், புலவர் அறிவுடை நம்பி, மாணவர் இரா. சனார்த்தனம் ஆகியோர் சிறந்த ஆராய்ச்சிக் கருத்துக்களடங்கிய உரைகளை நிகழ்த்தினர்.

கலை நிகழ்ச்சிகள்

பிற்பகல், சந்திரசேகரன் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சியும், மாலை 6-மணிக்கு திருமதி எம். எஸ். சுப்புலட்சுமியின் இசையரங்கும் நடைபெற்றன.

இரவு 10-மணிக்கு திரு. மு கருணாநிதி அவர்கள் எழுதிய 'துறவி' என்னும் நாடகம், தமிழக அரசுத் தலைமைச் செயலக அலுவலர்களால் சிறப்பாக நடைபெற்றது.

இரண்டாம் நாள்

இன்று காலை நிகழ்ச்சி பூம்புகாரில், செம்பனார்கோயில் தெட்சிணாமூர்த்தியின் நாயன இசையுடன் துவங்கியது.

இசை நிகழ்ச்சி முடிந்தபின், இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் புற வேலைக் குழுத் தலைவர் நீலநாராயணன், புலவர் குழுவை வரவேற்று உரை நிகழ்த்தினார்.

அதன்பின், விழாவிற்குப் பொதுப் பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி தலைமை வகித்தார்.

விழாவில் கலந்துகொள்ள வந்திருந்த முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கட்கும், பொதுப் பணி அமைச்சர் கருணாநிதி அவர்கட்கும், புலவர் குழுச் சார்பில் முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் சரிகை மாலை அணிவித்து வரவேற்றார்.

பின்பு புலவர் குழுத் தலைவர் சங்கரநாராயண பிள்ளைக்குப் பொதுப் பணி அமைச்சர் கருணாநிதி அவர்கள், பொன்னாடை அணிவித்தார்.

அதன்பின் விழாவிற்கு வந்திருந்த புலவர்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

சோவியத்து நாட்டுத் தமிழ்ப் பேராசிரியர் செம்பியன் அவர்களையும், அமைச்சர் கருணாநிதி அவர்கள் மாநாட்டில் அறிமுகம் செய்து வைத்தார்.

அமைச்சர் மு. கருணாநிதியின் தலைமை உரைக்குப்பின், அறிஞர் அண்ணா அவர்கள், பேராசிரியர் இலக்குவனார் எழுதிய 'தொல்காப்பிய' ஆங்கில மொழிபெயர்ப்பு நூலை வெளியிட்டுப் பேசினார்.

சிற்பி முத்தழகு ஆச்சாரியார் என்பவர், தாம் ஒரே அரிசியில் உருவாக்கிய திருவள்ளுவர் சிலையை அண்ணா அவர்களிடம் அளித்தார்; அவருக்கு மாலை அணிவித்துப் பாராட்டினார்—அமைச்சர் கருணாநிதி.

அதன்பின், 'தமிழியற் காட்சிகள்' என்ற தமிழ் நூலைப் பொதுப் பணி அமைச்சர் கருணாநிதி வெளியிட்டார்.

நூற் படிகளை திருமதி இராதா தியாகராசன் புலவர் பெருமக்களுக்கு வழங்கினார்.

புலவர்கள் வ. சு. ப. மாணிக்கம், திருமதி இராதா தியாகராசன், சோவியத்துத் தமிழ்ப் பேராசிரியர் செம்பியன் ஆகியோரும் நன்றி கூறிப் பேசினர்.

காரைக்குடியிலிருந்து சைக்கிளில் வந்து அறிஞர் அண்ணா அவர்களிடம் தமிழ்ச் சுடர் வழங்கப்பட்டது.

இறுதியில், புலவர் குழுச் செயற்குழு உறுப்பினர் வேணுகோபால் பிள்ளை, பேராசிரியர் இலக்குவனார், டாக்டர் மு. வரதராசனார், முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் ஆகியோர் தமிழகப் புலவர்கள் சார்பாக நன்றி தெரிவித்துப் பேசினார்கள்.

நிகழ்ச்சிக்கு அமைச்சர்கள், இரா. நெடுஞ்செழியன், ஏ கோவிந்தசாமி, மா. முத்துசாமி, எஸ். ஜே. சாதிக் பாட்சா ஆகியோரும் வந்திருந்தனர்.

பிற்பகல் நிகழ்ச்சிகள்

பிற்பகல் நிகழ்ச்சி மாலை 3 மணிக்குத் தொடங்கியது.

பிச்சைக்குட்டிக் குழுவினரின் வில்லிசை நிகழ்ச்சியுடன் தொடங்கிய திருக்குறள் உரைக் கோவை மாநாட்டைக் குன்றக்குடி அடிகளார் தொடக்கிவைத்து உரையாற்றினார்.

அவர் உரையாற்றிய பின், திருச்சி தேசியக் கல்லூரி மாணவர்கள் 16 பேர் கொண்டுவந்த 'தமிழ்ச் சுடரை' அமைச்சர் இரா. நெடுஞ்செழியனிடம் அளித்தனர்; அதைப் பெற்றுக்கொண்ட அமைச்சர் நெடுஞ்செழியன் நன்றி தெரிவித்துப் பேசினார்.

அடுத்து சட்டமன்றத் துணை அவைத்தலைவர் புலவர் ஏ. கோவிந்தன் குறள் உரைக் கோவை மாநாட்டிற்குத் தலைமைவகித்துத் தலைமை உரையாற்றினார்.

அவர் பேசிய பின், கி. வா. செகநாதன், 'அறம்பொருள்' என்பது பற்றி அரியதோர் உரையாற்றினார்.

திரு. கோதண்டபாணி, 'இன்பம்' என்ற தலைப்பில்பேசினார்.

திருக்குறள் உரைக் கோவைக்குப் பின், இசைச்சித்தர் சிதம்பரம் செயராமன் இசை விருந்து நடைபெற்றது.

புறநானூற்றுக் காட்சிகள்பற்றி நாட்டிய நாடகமும், புஷ்பா குழுவினர் நாட்டியமும், செல்வியர் சுப்புலட்சுமி—பத்மா—ஜெயா குழுவினர் நடனமும் நடைபெற்றது.

இரவில் திருமதி பத்மினி குழுவினரின், 'கண்ணகி' நாட்டிய—நாடகம் நடைபெற்றது

சிறுவர் விளையாடுமிடமாகிய 'சிறுவர் உலகம்' என்ற பகுதியை கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் இன்று திறந்துவைத்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, குப்பைநாராயண செட்டித் தெரு, சென்னை—13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

நூற்றுண்டு விழா மண்டபத்தில்!

உலகத் தமிழ் மாநாட்டையொட்டிய தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்கு, 4—1—68 காலை சென்னைப் பல்கலைக் கழக நூற்றுண்டு விழா மண்டபத்தில், தனிநாயகம் அடிகள் தலைமையில் துவங்கிற்று.

நாற்பது நாடுகளின் 350 பிரதிநிதிகளும் பார்வையாளர்களும் மண்டபத்தில் நிரம்பியிருந்தனர்.

முதலில் மதுரை பொன்னுத்தாய் குழுவினரின் நாதசுர இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

பிரெஞ்சு நாட்டு அறிஞர் திரு. பிலியாசோ உரை நிகழ்த்தியபின், பல கேள்விகட்கு விடையளித்தார்.

சங்க காலத் தமிழ் மகளிர் குறித்த ஆராய்ச்சிக் கட்டுரையை திரு. கே. கே. பிள்ளை படித்து விளக்கமளித்தார்.

பிற்பகலில், ஆராய்ச்சியாளர்கள் பல குழுக்களாகப் பிரிந்து ஒவ்வொரு துறை பற்றியும் தனித் தனியே விவாதம் நடத்தினர்.

திரு. கே. வி. இராமன், தொல்பொருள் ஆய்வு குறித்த அறிக்கையை அளித்தார்.

திரு. ஆர். இரமணி (சிங்கப்பூர்) பண்டைக் கிரேக்க—ரோமானியரின் வாழ்க்கையுடன் தமிழர்கள் நகர வாழ்க்கையை ஒப்பிட்டு விளக்கினார்.

இலங்கையைச் சேர்ந்த திரு. செல்வநாயகம், தமிழ்நாட்டு நிலைப் பாகுபாடுகள் குறித்து விளக்கம் அளித்தார்.

மலாசியாவைச் சேர்ந்த திரு. பி. அருணசலம், போர் முறை பற்றிய விளக்கமளித்தார்.

காரைக்குடி திரு. டி. டி. மானுவெல்ராஜ், பண்டைக்கால சிலம்பப் பயிற்சி பற்றிப் பேசினார்.

மற்றும் ஜெர்மனியைச் சேர்ந்த டாக்டர் ஹெர்மன் பெர்கா, டாக்டர் என். வி. இராசகோபாலன் (ஆக்ரா), டாக்டர் பென்டி (பின்லாந்து), டாக்டர் ராபர்ட் ஆஸ்டர் விட்ஸ் (அமெரிக்கா), டாக்டர் வீராசாமி (கோவை), திருமதி டி. எம். காமேசுவரி ஆகியோரும் பல்வேறு பொருள்கள் குறித்துப் பேசினர்.

பெங்களூர்--செவந்தபுரம் எம். ஜி. ஆர். மன்றம்

21—12—67-ல் மேற்படி மன்ற நிர்வாகிகள் தேர்தல், 1-வது வட்ட தி. மு. க. செயலாளர் முமதிமாறன் தலைமையில் நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர் :—

அவைத் தலைவர்: சு. மணி; செயலாளர் : மு. மாறன்; துணைச் செயலாளர் : சி. துரைசாமி; பொருளாளர் : மு. தமிழ்ச்செல்வன்; செயற்குழு உறுப்பினர்கள்: ஏ. ஆறுமுகம், என். ஆபேல், எம். சிங்காரம், ஏ. துரை.

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கப் பொதுப்பணி அமைச்சர் கருணாநிதியைச் சந்தித்துப் பேசினார்.

"இலங்கையில் பல நெருக்கடிகள் இருப்பினும், அஞ்சல் தலை தமிழில் இருக்கிறது; நாடாளுமன்றத்தில் தமிழில் பேசலாம்; தந்தியும் தமிழில் அடிக்கலாம்"

என்பதைத் தெரிவித்த திருச் செல்வம் அவர்கள் அமைச்சர் கருணாநிதியை இலங்கைக்கு வரும்படி அழைப்பு விடுத்தார்.

தமிழக நிதி நிலை அறிக்கை தொடர்பான சட்டமன்றக் கூட்டம் முடிந்தவுடன் இலங்கைக்கு வருவதாக அமைச்சர் கருணாநிதி, திருச் செல்வம் அவர்களிடம் கூறினார்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

7--1--68

சேலம்

உதயசூரியன் படிப்பகத்தின் சார்பில் இரவு 7 மணிக்கு குகை, பட்டார பைலில்; தலைவர் : எஸ். சீனிவான்; பேசுவோர் : குன்னத்தூர் க. அன்பரசு, கே. செயராமன் பி.ஏ., எம்.எல்.ஏ., ஈ. ஆர். கிருட்டினன் எம்.எல்.ஏ., சிற்றுளி சுப்பிரமணியம், ஏ. மாரியப்பன்.

(5-ம் பத்தி தொடர்ச்சி)

மாலை 4 மணி: **பட்டி மன்றம்;** பொருள்: 'சங்க காலத்துக்குப் பின்னர் தமிழ் சிறப்பான வளர்ச்சி பெற்றிருக்கிறது—வளர்ச்சி பெறவில்லை'; தலைவர் : ப. சு. மணியம்; 'வளர்ச்சி பெற்றிருக்கிறது' என்னும் தலைப்பில் எம். முகமது முஸ்தபா, ப. குணசேகர் ஆகியோரும்—'வளர்ச்சி பெறவில்லை' என்னும் தலைப்பில் புலவர் நன்னன், கோ. இளங்கோவன் ஆகியோரும் பேசுவர்.

6 மணிமுதல் 6-30 மணி வரை: தமிழிசை—யு. ஆர். ஜீவரத்தினம்.

இரவு 7 மணி: **நாட்டிய நாடகம்;** 'காவேரி தந்த கலைச் செல்வி'—ஜெயலலிதா குழுவினர்.

இரவு 9-15 மணி: நாடகம்—'ஓர் இரவு' (அறிஞர் அண்ணா எழுதியது)—கே. ஆர். இராமசாமி குழுவினர் நடிப்பது.

62-வது பார்க்பேர் பொருட்காட்சி

எஸ். ஐ. ஏ. ஏ. மைதானம் — சென்னை-3

7--1--68 ஞாயிறு மாலை 6 மணிக்கு

லலிதாஞ்சலி அளிக்கும்

'பிஞ்சு மனம்' நாடகம்

8--1--68 திங்கள் மாலை 6-30 மணிக்கு

யங் ஸ்டார் கல்சரல் அசோசியேஷன்ஸ் அளிக்கும்

'சுகமாய் போய் வா' நாடகம்

11—1—68 வியாழன் மாலை 6-30 மணிக்கு—இலட்சிய நடிகர் எஸ்.எஸ். இராசேந்திரன் நடிக்கும் நாடகம் 'தமிழ் எங்கள் உயிர்'

15—1—68 திங்கள் மாலை 6-30 மணிக்கு—நாட்டியப் பேரொளி பத்மினியின் 'தசாவதாரம்' நாட்டிய நாடகம் நடைபெறும்.

கட்டணம்: ரூ. 2, 1. காசு 50

பூம்புகார் நகரில்..!

7--1--68-ம் நாள்

நிகழ்ச்சிகள்

காலை 9 மணி: **நாயன இசை**—திருவெண்காடு சுப்பிரமணிய பிள்ளை.

9-30 மணிமுதல் 11-30 மணிவரை: **சொற்பொழிவு;** பொருள்: 'இலக்கியத்தில் புரட்சி'—தொடக்கவுரை: என். வி. நடராசன் எம்.எல்.சி.; தலைமையுரை: கி. மனோகரன் எம்.ஏ., எம்.பி.; பேசுவோர்: அப்துஸ் சமது எம்.பி., ரம்போலா மஸ்கரனஸ், துரை முருகன், டாக்டர் வ.சுப. மாணிக்கம், வெள்ளைவாரணனார், க. திருமாறன், இளமுருகு பொற்செல்வி, மீ. ப. சோமசுந்தரம்.

11-30 மணிமுதல் பிற்பகல் 1 மணி வரை: **பட்டிமன்றம்;** பொருள்: 'பாரதிதாசன் கவிதைகளில் மிகுதியாகக் காணப்படுவது புரட்சி உணர்வா? தமிழ் உணர்வா?'—தலைவர்: மாண்புமிகு மா. முத்துச்சாமி; 'புரட்சி உணர்வு' எனும் தலைப்பில் பேசுவோர்: கு. சிவஞானம் எம்.ஏ., கவிஞர் நாவரசு, கவிஞர் வேழவேந்தன்; 'தமிழ் உணர்வு' எனும் தலைப்பில் பேசுவோர்: கணேச கோபாலகிருட்டினன், இராசேசுவரி நடராசன், புலவர் பொன்னிவளவன்.

பிற்பகல் 2-30 மணி: **நாயன இசை**—காஞ்சி அண்ணாமலை.

3 மணி: தமிழிசை—சதாசிவம் குழுவினர்; தமிழ்ப் பாடல்: செல்வி விஜயா.

3-30 மணி: அவதானம்—கு. அரங்கசாமி.

மாலை 4 மணிமுதல் 6 மணிவரை: **கவியரங்கம்;** பொருள்: 'தமிழக விடுதலை வீரர்கள்'—தலைவர்: மாண்புமிகு மு. கருணாநிதி; திருச்சிற்றம்பலக் கவிராயர், தி. கு. நடராசன், கு. மா. பாலசுப்பிரமணியம், திருமதி சௌந்தரம் கைலாசம், நா. பாண்டுரங்கம், எஸ். டி. சுந்தரம் ஆகியோர் முறையே—கட்டபொம்மன், மருதிருவர், வ. உ. சி., வ. வே. சு. ஐயர், திரு. வி. க., பாரதியார் பற்றியும், அறிஞர் அண்ணா அவர்களைப் பற்றி பொன்னிவளவன், அப்துல் ரகிமான், மக்கலிங்கம், வேழவேந்தன், தமிழ் பித்தன், கருணானந்தம், கொத்தமங்கலம் சுப்பு, முடியரசன் ஆகியோர் முறையே—பேச்சாளர், முதல்வர், நடிகர், அன்னை, தத்துவமேதை, தலைவர், எழுத்தாளர், தாய்மொழிக் காவலர் என்ற தலைப்புகளிலும் பாடுவர்.

மாலை 6 மணி: **நாட்டிய நாடகம்:** 'சீவக சிந்தாமணி'—குமாரி பாரதி.

இரவு 7 மணி: **நாட்டிய நாடகம்:** 'சித்திரப் பாவை'—செல்வி மல்லிகா குழுவினர்.

இரவு 9 மணி: **நாடகம்:** 'தமிழ் எங்கள் உயிர்' (அடியார் எழுதியது)—எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினர் நடிப்பது.

8--1--68-ம் நாள்

நிகழ்ச்சிகள்

காலை 9 மணி: **நாயன இசை**—மதுரை பொன்னுத்தாய்.

9-30 மணி முதல் 11-30 மணி வரை: **சொற்பொழிவுத் தொடர்;** பொருள்: 'மகளிர் மாண்பு'—தொடக்கவுரை: இராதா தியாகராசன்; தலைமையுரை: சவுந்தரா கைலாசம்; பேசுவோர்: விசாலாட்சி நெடுஞ்செழியன், சந்திரகாந்தி கோவிந்தராசுலு, லட்சுமி கிருட்டினமூர்த்தி எம்.எல்.சி., பொற்செல்வி இளமுருகு, மகாலட்சுமி, சற்குணம், அமுதா ராகவன், ஏமப்பிரபா; சிறப்புரை: மாண்புமிகு சத்தியவாணிமுத்து.

11-30 மணிமுதல் பிற்பகல் 1 மணி வரை: **கவியரங்கம்;** பொருள்: 'தமிழன்'—தலைவர்: கவிஞர் வாணிதாசன்; முருகு சுந்தரம், செல்வி ஜுவாலா, தேவிதாசன், குடியரசு, த. புருடோத்தமன், மணிமொழி, புலமைப்பித்தன், பாலசுந்தரம், சாரணபாஸ்கரன், இளஞ்செழியன் ஆகியோர் முறையே—மன்னன், இல்லாளன், துறவி, வீரன், உழவன், கலைஞன், அறிஞன், புலவன், வணிகன், அமைச்சன் ஆகிய தலைப்புகளில் பாடுவர்.

பிற்பகல் 3 மணி: **அருட்பா**—சரசுவதி சீனிவாசன் குழுவினர்; சேலம் சீனிவாசன் குழுவினர்—பாரதிதாசன் பாடல்.

(3-ம் பத்தி பார்க்க)

கலை நிகழ்ச்சிகள்

7—1—68

ஆழ்வார் திருநகரி இசக்கித் தேவர் குழுவினரின் கரகம்—இரவு 6-மணி முதல் 6-30 வரை; கரிவலம்வந்தநல்லூர் கருப்பையா அண்ணாவி குழுவினரின் கரகம்—6-40 முதல் 7 மணிவரை; திருச்சி செல்வி கல்யாணி குழுவினரின் கரகம்—7 மணிமுதல் 7-30 மணி வரை; ஆவடி எஸ் ஏ.பி. போலீசுப் படைக் கலைக் குழுவினரின் கரகம்—7-30 மணிமுதல் 8 மணிவரை.

8—1—68

கோவை பாவேந்தர் பாரதிதாசன் மன்றத்தாரின் கிராமிய நடனம்—மாலை 6 மணிமுதல் 6-40 மணிவரை; கோடம்பாக்கம் சிதானந்தா நாட்டிய மண்டலியினரின் கிராமிய நடனம்—6-40 முதல் 7 மணி வரை; கோவை மக்கள் நல மன்றத்தாரின் கிராமிய நடனம்—7-20 முதல் 8 மணிவரை; செங்கம் மாசிலாமணி குழுவினரின் கிராமிய நடனம்—8 மணிமுதல் 8-40 வரை.